# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப்பரீட்சை - 2018

| தரம் -06 | சைவநெறி | நேரம் : 2 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி – I

❖ மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

1) ஓங்்கார வடிவமாக விளங்குபவர்.
   1. விநாயகர் 2. சிவபெருமான் 3. திருமால் 4. முருகன்

2) விநாயகரை அர்ச்சிக்க மிகவும் உகந்தது.
   1. தேங்காய் 2. வில்வம் 3. அறுகம்புல் 4. துளசி

3) விளக்கேற்ற உகந்தவை,
   1. நெய், நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய்.
   2. கடலைஎண்ணெய், சூரியகாந்தி எண்ணெய்
   3. நெய், கடலை எண்ணெய்
   4. நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய்.

4) 'அரிது அரிது மானிடராதல் அரிது' எனக் கூறியவர்.
   1. அதிவீராம பாண்டியன் 2. ஔவையார்
   3. திருவள்ளுவர் 4. புகளேந்தி

5) திருநீறு அணிய உத்தம திசைகளாவன.
   1. வடக்கு, கிழக்கு 2. மேற்கு, தெற்கு
   3. வடக்கு, தெற்கு 4. கிழக்கு, தெற்கு

6) "மெய்ம்மை" என்னும் கதையை எழுதியவர்.
   1. ஆறுமுகநாவலர் 2. ஔவையார்
   3. சம்பந்தர் 4. திருவள்ளுவர்

7) திருநீறு அணியும் போது சொல்ல வேண்டியது.
   1. சிவாயநம 2. நமசிவாய 3. சிவசிவ 4. நாராயணாய

8) "அறம் செய விரும்பு" என்ற மனவாக்கியம் இடம் பெறும் நூல்.
   1. வெற்றி வேற்கை 2. திருக்குறள்
   3. ஆத்திசூடி 4. அகராதி

9) தேவர்களின் அரசன்.
   1. தேவேந்திரன் 2. வருணன் 3. அக்னி 4. திருமால்

10) நன்றி மறவாமை என்ற கதையைக் கூறியவர்.
   1. வசிட்டர் 2. வான்மிகி 3. வியாசர் 4. தேவேந்திரன்



kalvi.lk

11) சைவர்களின் இல்லங்களில் தெய்வ வழிப்பாட்டிற்கென ஒதுக்கப்படும் இடம்.
1. சமையலறை 2. சுவாமி அறை 3. வரவேற்பறை 4. படுக்கையறை

) குருஷேத்திரப் போரில் வென்றபின் தர்மபுத்திரர் செய்த யாகத்தின் பெயர்.
1. அஸ்வமேதயாகம் 2. கணபதி ஓமம்
3. நவக்கிரக யாகம். 4. குண்டல யாகம்

13) பஞ்சபுராணம் ஓதுவதற்கு முன்பும் பின்பும் கூறவேண்டியது,
1. நமசிவாய 2. சிவசிவ 3. திருச்சிற்றம்பலம் 4. காயத்ரி மந்திரம்

14) நாமகரணம் எனப்படுவது,
1. பெயர் சூட்டுதல் 2. காது குத்தல்
3. அன்னமூட்டுதல் 4. ஏடு தொடக்குதல்

15) "இடரினும் தளரினும் ……." எனும் பதிகத்தை அருளியவர்.
1. அப்பர் 2. சுந்தரர் 3. சம்பந்தர் 4. மாணிக்கவாசகர்

16) முதன் முதலில் நெற்றியில் மூன்று முறை குட்டி விநாயகரை வழிபடும் முறையை கொணர்ந்தவர்.
1. சம்பந்தர் 2. ஔவையார் 3. அகத்தியர் 4. வியாசகர்

17) சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் முகமாகக் கொண்டாடப்படும் பண்டிகை.
1. தைப்பொங்கல் 2. தீபாவளி 3. ஆடிப்பிறப்பு 4. புதுவருடப்பிறப்பு

18) சோறூட்டற் சடங்கினை வேறு எவ்விதம் அழைப்பர்.
1. அன்னப்பிரசானம் 2. அட்சர அப்பியாச ஆரம்பம்
3. கர்ணவேதனம் 4. பெயர் சூட்டுதல்

19) 'பெரியார்' என அழைக்கப்படுபவர்கள்.
1. பெற்றோர் 2. குரு 3. வயதில் மூத்தோர் 4. மேற்கூறிய யாவரும்

20) எமது கண்கண்ட தெய்வங்கள்
1. குரு 2. நண்பர்கள் 3. மூத்தோர்கள் 4. தாய், தந்தை

(2x20=40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி – II

❖ முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1) பின்வரும் தேவாரப் பாடல்களுள் இரண்டினை வரிக்கிரமமாக எழுதுக. அவற்றைப் பாடியவர் பெயர், பாடப்பட்ட தலம் என்பவற்றையும் தருக.

1) "இடரினுந்தளரினும் ...."    2) "ஓசை ஒலியெல்லாம் ......"

3) "பித்தா பிறைசூடி ...."

(8+1+1=10x2=20 புள்ளிகள்)

2) "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"

1) விழுமியங்கள் எனப்படுவது யாது?
2) சமய விழுமியப் பண்புகள் நான்கு தருக?
3) உண்மை என்பதற்கு வேறுபெயர்கள் இரண்டு தருக?
4) பெரியோர் முன்னால் தவிர்க்க வேண்டிய செயல்கள் 4 தருக?
5) உங்கள் வீட்டுப் பெரியோர்களுக்கு எவ்வாறான உதவிகளைச் செய்கின்றீர்கள்?

(2x5=10 புள்ளிகள்)

3) "அரிது அரிது மானுடராதல் அரிது"

1) சிவசின்னங்கள் எவை?
2) சிவசின்னங்கள் எமக்கு எவற்றை நினைவூட்டும் சாதனங்களாக விளங்குகின்றன?
3) உத்தூளனம், திரிபுண்டரம் என்பவற்றை விளக்குக.
4) உணவு உண்ணத் தொடங்கு முன் பாடப்பட வேண்டிய தேவாரத்தைத் தருக.

(2+2+4+2=10 புள்ளிகள்)

4) "சைவஇல்லம் தெய்வீக சந்நிதியாகவும், கலைக் கோயிலாகவும், நற்பழக்க வழக்கங்களுக்குப் பயிற்சி நிலையமகவும் அமைந்துள்ளது ஆகும்."

1) வீட்டில் அன்றாட கடைப்பிடிக்க வேண்டிய அன்றாட பழக்கவழக்கங்கள் 4 தருக?
2) பஞ்சபுராணம் ஓதும் முறையை ஒழுங்கு முறையில் எழுதுக.
3) விஷேட தினங்கள் 4 தருக?
4) விசேட தினங்களில் நீர் பின்பற்றும் சைவப்பழக்கவழக்கங்களை 4 தருக.

(3+2+2+3=10 புள்ளிகள்)

5) "வேழமுகத்து விநாயகனை தொழ வாழ்வு மிகுந்து வரும்"

1) "வெற்றி வேற்கை" என்னும் நூலை இயற்றியவர்?
2) விநாயகரை வழிபடும் இடங்கள் 4 தருக?
3) விநாயகர் திருவுருவம் இல்லாத இடத்தில் எவ்வாறு வழிபாடு செய்யப்படுகின்றது?
4) விநாயகரை வழிபடுவதற்குரிய சிறப்பான வழிபாட்டு முறையினைக் கூறி இவரை வழிபடுவதால் கிடைக்கம் பயன்கள் 2 தருக.

(2+2+2+4=10 புள்ளிகள்)

6) "வாழ்வியற் சடங்குகள் வாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும் மேற்கொள்ளப்படுகின்றன"

1) வாழ்வியற் சடங்கு என்றால் என்ன?
2) வாழ்வியற் சடங்குகள் 4 தருக.
3) ஏடு தொடக்குதல் என அழைக்கப்படுவது யாது?
4) ஏடு தொடக்குதல் எப்போது மேற்கொள்ளப்படும் இச்சடங்கின் நோக்கம் 2 தருக?

(2+2+2+4=10 புள்ளிகள்)



kalvi.lk

7) பின்வருவனவற்றில் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1) விரதங்கள்
2) பண்டிகைகள்
3) நன்றி மறவாமை
4) சைவ இல்லம்
5) உண்மை பேசுவோம்

(5x2=10 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

# ONLINE CLASSES

## TAMIL AND ENGLISH MEDIUMS

அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்....

GRADE 6

திறமை வாய்ந்த ஆசிரியர்களினூடான சிறந்த வழிகாட்டலுடன் கூடிய வினைத்திறன் மிக்க நிகழ்நிலை வகுப்புகள்.

FREE ADMISSION

075 287 1457

| | | |
|---|---|---|
| தமிழ் | வரலாறு | சுகாதாரம் |
| விஞ்ஞானம் | English | புவியியல் |
| கணிதம் | ICT | குடியியல் |

- Spoken English Classes.
- Sinhala Reading and Writing Classes.
- Map Marking Classes

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும். (தனிப்பாட அனுமதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்)



கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page